# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • ஜூன் 23, 2018

Weekly E-paper • June 23, 2018


# ஆட்சி செய்கிறது மனு நீதி!


• சுப.வீரபாண்டியன்



ஒளிவு மறைவாக இருந்த நிலை மாறி, நேரடியாகவே வெளிவந்து விட்டார்கள் என்று தோன்றுகிறது. நாட்டில் நடக்கிற ஒவ்வொரு நிகழ்வும், மத்திய அரசு மனு நீதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கி விட்டது என்பதாகவே உள்ளது.

அண்மையில், தமிழ் விடுதலைக் கழகத்தின் சார்பில், சென்னை, தியாகராயநகர், முத்துரங்கன் சாலையில் கூட்டம் நடத்த அனுமதி கோரியுள்ளனர். அவர்களுக்கு அனுமதி அளித்த காவல்துறை சில நிபந்தனைகளை விதித்துள்ளது. 7 ஆவது நிபந்தனை, "மனு சாஸ்திர புத்தகங்கள் மற்றும் சட்ட புத்தகங்கள் எதனையும் எரிக்கக்கூடாது" என்று உள்ளது. மனு சாஸ்திரம் எப்போது சட்டமானது? இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஆக்கித் தந்த குழுவின் தலைவரான அண்ணல் அம்பேத்கரே, 1927 இல் மனு சாஸ்திரத்தை எரித்துள்ளாரே! மனு நீதியே இனி இந்தியாவின் நீதி என்று மறைமுகமாகச் சொல்கின்றனரா?

கேரளாவின் முதலமைச்சர் பினராயி விஜயன் பிரதமர் மோடியைப் பார்க்க நான்கு முறை அனுமதி கேட்டு, நான்கு முறையும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.



சென்னை தியாகராயநகர் சரக காவல் உதவி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை, நாள். .06.2018

முன்னிலை

திரு.A.P.செல்வன்,
காவல் உதவி ஆணையாளர்,
தியாகராய நகர் சரகம்,
தி.நகர், சென்னை-17

ந.க.எண். /உ.ஆ/ தி.நகர். பொதுகூட்டம் /2018 - நாள். .06.2018

*******

மனுதாரராகிய திரு. சுந்தரமூர்த்தி தலைமை ஒருங்கிணைப்பாளர், தமிழ் விடுதலை கழகம், எண் 5, 3வது முதன்மை சாலை, தென்றல் நகர் கிழக்கு, திருமுல்லைவாயில், சென்னை 62 ஆகிய தாங்கள் ஆர்.1 மாம்பலம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட முத்துரங்கன் சாலையில் 20.06.2018 தேதி மாலை 17.00 மணி முதல் 22.00 மணி வரை வேல்முருகன் கைதை கண்டித்தும் மணியரசன் மீதான தாக்குதலை கண்டித்தும் இந்திய அரசால் தமிழகத்தின் செயல்படுத்தவிருக்கும அழிவு திட்டங்களால் தமிழகத்திற்கு நிகழ உள்ள ஆபத்துகள் என்ற தலைப்பில் பொதுகூட்டம் கீழ்காணும் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்த அறிவுறுத்தப்படுகிறது.

**விதிமுறைகள்.**

1. தெருமுனைக்கூட்டம் அமைதியான முறையில் நடத்த அறிவுறுத்தப்படுகிறது.
2. தெருமுனைக்கூட்டத்தில் பெட்டி வடிவ ஒலி பெருக்கி மட்டுமே உபயோகப்படுத்தப்பட வேண்டும்.
3. தெருமுனைக்கூட்டம் நடத்தும் பொழுது பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனை அருகில் இருப்பதால் பெட்டி வடிவ ஒலிபெருக்கியை சத்தத்தை குறைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.
4. பள்ளி மற்றும் கல்லூரி தேர்வு நடைபெறும் நேரத்தில் மாணவர்களின் தேர்வினை கருத்தில் கொண்டு பெட்டி வடிவ ஒலிபெருக்கியை சத்தம் குறைவாக பயன்படுத்தி மாணவர்களுக்கு சிரமம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
5. மத, இன உணர்வுகளை புண்படும் வகையில் பேசக்கூடாது.
6. கூட்டத்தில் உருவ பொம்மைகள் கொண்டு வரவோ அல்லது எரிக்கவோ கூடாது.
7. மனுசாஸ்திர புத்தகங்கள் மற்றும் சட்ட புத்தகங்கள் எதனையும் எரிக்கக்கூடாது.
8. பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் எவ்விதத்திலும் இடையூறு இல்லாத வகையில் நடத்தப்பட வேண்டும்.
9. கூட்டத்தில் தனிப்பட்ட நபர்களையோ, அவர்களது குடும்பத்தினரையோ தாக்கி பேசக்கூடாது.
10. பேச்சாளர்கள் கீழ்தரமான வார்த்தைகள் பயன்படுத்தி பேசக்கூடாது. அவ்வாறு பேசினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
11. தேசிய ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பேசவதோ, விளம்பர பலகைகள் வைப்பதோ கூடாது.

தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராகவும், காவிரி ஆணையத்துக்கு எதிராகவும் பேசக்கூடும் என்பதால், கர்நாடக முதலமைச்சருக்குப் பிரதமரைச் சந்திக்க உடனடியாக அனுமதி வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலிருந்து ஒரு நடிகை தில்லிக்குப் போனால், பிரதமரை உடனே சந்தித்து விட முடிகிறது. ஆனால் தமிழ்நாட்டிலிருந்து விவசாயிகள் சென்றால் சந்திக்க முடியவில்லை.

மக்களுக்கு ஆதரவாக, மக்களிடையே மாணவி வளர்மதி பேசினால், வலுக்கட்டாயமாகத் தூக்கிச் சென்று கைது செய்கின்றனர். ஆனால், பெண் ஊடகவியலாளரைப் பற்றி அவதூறு பரப்பிய காமெடி நடிகர் எஸ்.வி.சேகரை நீதிமன்றம் பிணை மறுத்த பிறகும், ஏறத்தாழ 60 நாள்கள் கைது செய்யவில்லை. இறுதியாகவும், அவர் நீதிமன்றம் வந்தவுடனேயே பிணை கிடைத்து விடுகிறது.

மோடி நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். எடப்பாடி தரையில் கைகட்டிக் காத்திருக்கிறார். மனு நீதி ஆட்சி செய்கிறது!

•

# பிராமணாள் கஃபேயும், பிற்போக்குத் தீர்ப்பும்.

வெற்றிச் செல்வன்

Unfortunately, the centuries old Indian caste system still takes its toll from time to time… It is absolutely imperative to abolish the caste system as expeditiously possible for the smooth functioning of Rule of Law & Democracy in our country.

- ***State of UP Vs Ram Sajivan and others.***



*2010 ஆம் ஆண்டு, "கிருஷ்ண அய்யர் பிராமணாள் கஃபே" என்ற பெயரில் உள்ள உணவகத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பெரியார் திராவிடர் கழகத்தினர் நடத்திய போராட்டம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் அண்மைத் தீர்ப்பு பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.*

*"கடைகளுக்குத் தாங்கள் விரும்பும் பெயர்களைச் சூட்டுவதற்கு உரிமையாளர்களுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் 19(1) ஏ மற்றும் 19(1) ஜி உரிமை வழங்கியுள்ளது" என்று கூறியதோடு, "கோனார் மெஸ், முதலியார் இட்லி கடை, ஐயங்கார் பேக்கரி போன்ற சாதிப் பெயர்களைக் கொண்ட வியாபார நிறுவனங்கள் இருக்கும் போது ஏன் பிராமணாள் கஃபே என்ற பெயருக்கு மட்டும் எதிர்ப்புத் தெரிவிக்கிறீர்கள்?" என்று தனது தீர்ப்பில் உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.*

*பிராமணன் என்றால் என்ன? பிரம்மனின் நெற்றியில் இருந்து பிறந்தவன் என்பது தானே! எனவே பிராமணன் என்பதை ஒப்புக் கொண்டால், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற வருணப் பாகுபாட்டையும் ஏற்றுக் கொள்வது என்பது தானே பொருள். இந்தப் புரிதல், உயர்நீதிமன்றத்திற்கு இல்லாதது ஏன்? அய்யர், அய்யங்கார் பேக்கரிக்கு இங்கு எதிர்ப்பு உள்ளதா?*



**தந்தை பெரியார்**

நானும் 20 வருடமாகச் சொல்கிறேன், பார்ப்பானை 'பிராமணன்' என்று சொல்லாதே. அவனைப் பிராமணன் என்று கூறினால், நீ யார்?

(விடுதலை 30.08.1958)

*பிராமணன் என்ற சொல், வருணாசிரமத்தின் வெளிப்பாடு என்பதால், வருணபேதத்தை ஏற்படுத்துகிறது என்பதால் தானே அது எதிர்க்கப்படுகிறது.*

*இன்றும், பார்ப்பனர் என்ற பதம் பகுத்தறிவாளர்களால் பயன்படுத்தப்படுவது, பிராமணன் என்ற சொல் மூட நம்பிக்கைக்கும், புராணப் புளுகிற்கும் வித்திடுகிறது என்பதால் தானே?*

*இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் சாராம்சத்தை உயர்நீதிமன்றம் ஏன் புரிந்து கொள்ளவில்லை? "இந்த நாட்டில், சட்டத்தின் ஆட்சி செம்மையாக நடைபெற சாதி முறை ஒழிக்கப்பட வேண்டும்" என்ற தீர்ப்பை உயர்நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொள்ளாதது ஏன்? சாதி ஒழியவேண்டுமெனில், சாதி முறையை ஊக்குவிக்கும் வருணம் ஒழிக்கப்பட வேண்டும் என்பது நீதிமன்றத்திற்குத் தெரியாதா? உயர்நீதிமன்றம் தான் பதில் சொல்ல வேண்டும்.* ●



## FETNA ஆண்டுவிழா

நாள்:
**ஜூன் 30**

இடம்:
**Dr Pepper Arena, City of Frisco, Dallas, TX**

கருத்தரங்கத் தலைமை:
**தோழர் சுப.வீரபாண்டியன்**

தலைப்பு:
**மரபு-மழலை-மகளிர்: அன்றும் இன்றும்**

## அமெரிக்காவில் ஆசிரியர் சுபவீ

அமெரிக்காவின் கொலராடோ தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 16.06.2018 அன்று நடந்த கூட்டத்தில் **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** எனும் தலைப்பில் கருஞ்சட்டைத் தமிழர் ஆசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் உரையாற்றினார்.



ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## காஞ்சிபுரம்–பல்லாவரம்
# தெருமுனைக் கூட்டம்!




**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம் பல்லாவரத்தில் 22.06.2018 அன்று தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் ஜெஃப்ரீ தலைமை தாங்கினார். துணைப் பொதுச் செயலாளர் தோழர் சிங்கராயர் பேரவைக் கொடியை ஏற்றிவைத்தார். இக்கூட்டத்தில் ‘அம்பேத்கர் பார்வையில் திராவிடம்’ என்ற தலைப்பில் எழுத்தாளர் தோழர் வே.மதிமாறன் எழுச்சியுரையாற்றினார். கூட்டத்தில் தோழர் இராவணன் நன்றியுரையுடன் தெருமுனைக் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

# அமெரிக்கத் தமிழர்களுடன்
## தோழர் சுப.வீரபாண்டியன்



**இ**ப்போது அமெரிக்காவில் உள்ள தோழர் சுபவீ அங்குள்ள தமிழர்களைச் சந்தித்து, தமிழகச் சமூக, அரசியல் தொடர்பான உரையாடல்களை நிகழ்த்தி வருகின்றார். டென்வர், பார்க்கர் பகுதியில் 17.06.2018 அன்று நடைபெற்ற உரையாடலின் போது...

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

# கோயபல்ஸ் கூட்டாளிகள்!

**ஒ**ரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால், அந்தப் பொய் உண்மை போன்ற வடிவத்தை அடைந்துவிடும் என்று சொன்னார் பால் ஜோசப் கோயபல்ஸ்.

நாசிசத்தின் கொள்கையில் வளர்ந்த இவர், அடால்ப் இட்லரின் நெருங்கிய நண்பர். ஜெர்மானிய நாசிசத்திற்கும், இந்திய பா.ஜ.க.விற்கும் பெரிய வேறுபாடு ஒன்றும் இல்லை. ஆரியத்தின் மேலாதிக்கம்தான் இரண்டிற்கும் குறிக்கோள்.

பா.ஜ.க.வில் இனம், மொழி, மதம், சாதி, நாடு, நடப்பு என்று எல்லாவற்றிலும் பொய் சொல்லக் கொஞ்சமும் தயங்கமாட்டார்கள்.

சென்னை மெரினாவில் சல்லிக்கட்டுப் போராட்டம் அமைதியாக நடந்தது. இறுதிநாளில் காவலர்கள் அத்து மீறியதால் அது கலவரமாக மாறியது.

உடனே பா.ஜ.க.வினர் சொன்னார்கள் ‘தீவிரவாதிகள் ஊடுருவி விட்டார்கள், அவர்களால்தான் கலவரம் ஏற்பட்டது என்று.’

அதே நேரத்தில் தொலைக்காட்சிகளில் காவல்துறையின் பெண் காவலர் உட்பட, மேலும் சில காவலர்கள், அங்கிருந்த வண்டிகளுக்குத் தீ வைத்த காட்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்து மக்கள் போராடிய போது காவல்துறையினர் அத்துமீறி துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 13 பேர் கொல்லப்பட்டார்கள்.

அங்கே துப்பாக்கியால் சுட்ட காவலர்களை அதே கோலத்துடன் தொலைக்காட்சியில் காட்சியாக ஒளிபரப்பினார்கள்.

அப்போதும் பொன்.ராதாகிருஷ்ணன், தமிழிசை, எச்.ராஜா போன்ற பா.ஜ.க.வினர் சொன்னார்கள், தீவிரவாதிகள் புகுந்துவிட்டார்கள் என்று.

இப்பொழுது சேலம் எட்டு வழிச் சாலைக்கு எதிராக மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுதும் பொன்.ராதாகிருஷ்ணன் சொல்லிக் கொண்டிருக்கிறார். இங்கேயும் தீவிரவாதிகள் நுழைந்துவிட்டார்கள் என்று.

அவர் ஒன்றை மறந்துவிடக் கூடாது. அவர் ஒரு மத்திய அமைச்சர். தீவிரவாதிகள் தமிழகத்தில் நுழைந்துவிட்டார்கள் என்றால், அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது.

ஆதாரம் இல்லாமல் அவர் சொல்லமாட்டாரே என்றால், ‘‘அதெல்லாம் எனக்குத் தெரியாது, நான் சொல்லிவிட்டேன். என் வேலை முடிந்தது. காவல்துறைதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ என்று சொல்கிறார்கள்.

எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது மத்திய அமைச்சரவையில் பொறுப்பு வகிக்கும் பொன்.ராதாகிருஷ்ணனுக்கு அழகில்லை.

முதலில் இவர் யாரைத் தீவிரவாதி என்று சொல்கிறார் என்று உறுதி செய்ய வேண்டும்.

அவர்களை அடையாளம் காட்ட வேண்டும்.

அதற்குரிய சாட்சிகள், சான்றுகளை மக்கள் முன் வைக்க வேண்டும். இதுதான் பொறுப்புள்ள ஓர் அமைச்சருக்கு அழகு.

இதையெல்லாம் விட்டுவிட்டு பொத்தாம் பொதுவாக ‘தீவிரவாதிகள் நுழைந்துவிட்டார்கள், சமூக விரோதிகள் நுழைந்துவிட்டர்கள்’ என்று திரும்பத் திரும்பச் சொல்வது நாட்டின் அமைதிக்குக் குந்தகம் ஏற்பட வழிவகுக்கும்.

இனியும் வேண்டாம் கோயபல்ஸ் வேலைகள்.

# எட்டு வழிச் சாலையும் எதிர்ப்பலையும்!

● மா.உதயகுமார்

தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் பாழ் செய்யும் பெரு முயற்சியில் பா.ஜ.க அரசு இறங்கியிருக்கிறது. நெடுவாசல், கதிராமங்கலம், தூத்துக்குடி, டெல்டா மாவட்டங்கள் என்கிற வரிசையில் இப்போது சேலம். எட்டு வழிச் சாலை ஏற்படுத்தும் விளைவுகள் தமிழ் நாட்டு மக்களிடம் பெருமளவு எட்டியிருக்கிறது. யாரோ விரைவாகச் செல்வதற்கு நம்முடைய வளங்களை நாம் விரயம் செய்ய வேண்டுமாம். அறிவித்திருக்கிறது அரசு. அதிர்கிறது தமிழ்நாடு.

ஒவ்வொரு ஆண்டும் வெம்மையும் வறட்சியும் அதிகரித்துக் கொண்டே போகும் நிலையில், இப்படி ஒரு திட்டத்தை ஓர் அரசு அறிவிக்கிறதென்றால், அந்த ஆட்சியாளர்களிடம் ஈரம் இல்லை என்பது விளங்குகிறது. நிலம் கையகப்படுத்தும் சட்டப்படி மக்களிடம் கருத்துக் கேட்பு நடத்த வேண்டும். இதை இந்த அரசு செய்யவில்லை. கருத்துக் கேட்பு நடத்தினால் என்ன கருத்து வரும் என்பது அவர்களுக்குத் தெரியும். மக்களைச் சந்திக்கும் வீரமும் இல்லை. இது எப்படி மக்களுக்கான திட்டமாக இருக்க முடியும். தேசத்தின் வளர்ச்சி என்றால் தேசம் என்பது மரமா அல்லது செடியா? தண்ணீர் ஊற்றி உரம் போட்டு வளர்ப்பதற்கு. மக்கள் இல்லாமல் இவர்களுக்குத் தேசம் தெரிகிறது என்றால், இவர்கள் இடப்போகும் சாலைகள் வழியாக வரப்போவது முதலாளித்துவத்தின் வளர்ச்சியேயாகும்.

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் விழிப்புணர்வை சேலம் மாவட்ட ஆட்சியர் வதந்திகள் என்றும் அவற்றை நம்ப வேண்டாம் என்றும் கூறுகிறார். மலைகளும், வனங்களும், விளைநிலங்களும் அழிக்கப்பட்டே சாலைகளை உருவாக்கப்போகிறோம் என்று அரசே சொல்கிறது. 10 ஆம் வகுப்பில் சுற்றுச்சூழல் படிக்கும் மாணவருக்குக் கூட இதனால் விளையும் கேடுகள் விளங்கும். ஆனால் குடிமைப் பணித் தேர்வுகளில் சுற்றுச்சூழலியலை தனியே ஒரு தாளாக எழுதித் தேர்ச்சி பெறும் IAS அதிகாரிகளுக்கு இது தெரியவில்லை என்றால் தூங்குபவர்களை எழுப்ப முடியும், தூங்குவது மாதிரி நடிப்பவர்களை எப்படி எழுப்புவது? ஆட்சியாளர்களும் அதிகாரிகளும், தாங்களும் மக்கள் திரளில் ஒரு துளிதான் என்பதை வசதியாக மறந்துவிடுகின்றனர்.

மக்களுக்காகவும் மரங்களுக்காகவும் குரல் கொடுப்பவர்களை உடனே கைது செய்கிறார்கள், மிரட்டுகிறார்கள். அன்றைக்கு அவர்களை எதிர்த்தவர்களை அரக்கர்கள் என்றார்கள்; இன்றைக்கு Anti-social Elements (சமூக விரோத சக்திகள்) என்கிறார்கள். அன்று நரகாசுரன் என்றார்கள்; இன்று நக்சலைட் என்கிறார்கள். ஆக மொத்தத்தில் நடப்பது தேவ அசுரப் போராட்டம் என்பது விளங்குகிறது.



சேலம் எட்டுவழிச் சாலையை எதிர்த்த மூதாட்டி கைது!

நாம் காவிரி உரிமைக்காகக் குரல் கொடுத்த போது திராவிடக் கட்சிகள்(திராவிடக் கட்சி என்று அவர்கள் குறிப்பிடுவது தி.மு.கழகத்தை மட்டும் தான்) இயற்கை வளங்களைப் பாதுகாக்கவில்லை, நீர் மேலாண்மை சரியில்லை என்று உளறிக்கொட்டியவர்கள் இன்று இயற்கை வளங்களையும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கக் குரல் கொடுக்கும் போது வளர்ச்சிப் பற்றி பேசுகிறார்கள். சரி, வளர்ச்சி முக்கியம் என்றால் சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியது தானே. அதைப் பற்றி வாய் திறக்கமாட்டார்கள்.

இவர்களுடைய நோக்கம் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதும் கிடையாது வளர்ச்சியும் கிடையாது. ஆட்சியில் இருக்கிற காலத்திலேயே தங்களுடைய சுயநலத்திற்குப் பயன்படும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதேயாகும். அதிலும் குறிப்பாக அவர்களுடைய குறி தமிழ்நாட்டின் மீது தான் இருக்கிறது. தமிழ்நாட்டைச் சூழ்ந்து கொள்வதும் சூறையாடுவதும் அவர்களுடைய செயல்திட்டம். மத்தியில் பா.ஜ.க.வும் மாநிலத்தில் அ.தி.மு.க வும் ஆட்சியில் அமர்ந்திருந்தால் அடுக்கடுக்காக அழிவுத் திட்டங்கள் தான் வந்து சேரும். வேறு எந்த மாநில மக்களும் இந்த அளவிற்கு மத்திய அரசை எதிர்த்துப் போராடுவதில்லை. அதனால் தான் அவர்கள் தமிழ்நாட்டைப் போர்க்களமாக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

பார்ப்பனிய ஆட்சி என்றைக்கும் சமூக




முன்னேற்றத்தைத் தடுக்கும். ஏனெனில் சமூகம் முன்னேறினால் முதலில் அடிவாங்குவது பார்ப்பனியம்தான். அதனால் அவர்கள் கொண்டு வரும் திட்டங்கள் எல்லாம் அவர்களுடைய முன்னேற்றத்திற்காக மட்டுமேயன்றி மக்கள் முன்னேற்றத்திற்காக அன்று.

வரலாற்றுக் காலம் தொட்டு மக்களுடைய வரிப்பணம் பார்ப்பனர்களுக்குப் பயன்படுவதை நாம் பார்த்து வருகிறோம். சமூக முன்னேற்றத்திற்குச் சிறிதும் பயன்படாத கோவில்களை அன்று அரசர்கள் கட்டிக் குவித்தனர். இன்று கோமான்களுக்குப் பயன்படும் சாலைகளைக் கட்ட மக்கள் வரிப் பணத்தையும் வனங்களையும் அழிக்கின்றனர். அவர்களுக்கும் நம்மை முதுகில் குத்த வீடணர்கள் கிடைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

வீடணர்களை விரட்டியடிப்போம், விடியலை நோக்கிப் பயணிப்போம்! ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.